**உதவி அமர்வு நீதிபதி/தலைமை குற்றவியல் நடுவர், கிருஷ்ணகிரி.**

முன்னிலை: திருமதி. எம்.சாந்தி, பி.எல்.,

உதவி அமர்வு நீதிபதி/தலைமை குற்றவியல் நடுவர், கிருஷ்ணகிரி.

2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 23-ம் நாள் திங்கட்கிழமை

**அமர்வு வழக்கு எண். 111/2021**

CNR NO. :TNKI02-006349-2021

(கிருஷ்ணகிரி, நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2-ல் முதல்நிலை வழக்கு எண். 20/2020 என கோப்பிற்கு எடுக்கப்பட்டது)

| | | |
|---|---|---|
| குற்றமுறையிடுபவர் | : | அரசுக்காக<br>காவல் ஆய்வாளர்,<br>மகாராஜாகடை காவல் நிலையம்,<br>கிருஷ்ணகிரி மாவட்டம்.<br>குற்ற எண் 317/2019. |
| குற்றம் சாட்டப்பட்டவர்கள் | : | 1. சேரன் வயது 21, த/பெ.ரமேஷ்,<br>குப்பமேட்டுத்தெரு,<br>பழையப்பேட்டை, கிருஷ்ணகிரி.<br>2. சுமன் வயது 21, த/பெ. சுகுமார்,<br>குப்பமேட்டுத் தெரு,<br>பழையபேட்டை, கிருஷ்ணகிரி.<br>3. அருண்குமார் வயது 20,<br>த/பெ.சிவக்குமார்,<br>க.எண்.1/62, கொத்தபேட்டை காலனி,<br>பழையபேட்டை, கிருஷ்ணகிரி.<br>4. மின்சாரகண்ணன் வயது 20,<br>த/பெ. கமல், க.எண்.43/78,<br>பகங்காளிதெரு,<br>பழையப்பேட்டை, கிருஷ்ணகிரி. |
| அரசு தரப்பில் எதிரிகள் மீது முறையிடப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | எதிரிகள் மீது இதச பிரிவுகள் 394 @ 394, r/w 397. |
| எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | 1 முதல் 4 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 394 r/w 397. |

நீதிமன்ற முடிவு : இறுதியாக 1 முதல் 4 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 394 r/w 397 ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 248 (1) ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது.

எதிரிகள் மற்றும் பிணையதாரர்கள் எழுதி கொடுத்த பிணை ஆவணத்தை மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு இரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு சொத்துகளான சா.பொ.1 – ரூ25,000/- பணத்தை ஏற்கனவே அசா.1 ன் வசம் இடைக்காலமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே இடைக்கால உத்தரவை இறுதி உத்தரவாக்கியும், மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு அசா.1 டம் ஒப்படைக்கப்பட்ட பொருட்களை அவரே வைத்துக்கொள்ளலாம் என்றும், இது குறித்து கொடுக்கப்பட்ட பிணைப்பத்திரம் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்யத்தக்கது என்றும், சா.பொ.2 – சுமார் 2 அடி நீளமுள்ள மரக்கட்டையை மேல்

முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்கவும், சா.பொ.3 – புகைப்படத்தில் உள்ள TN 24 Q 8182 என்ற Bajaj Discover என்ற வாகனம் காவல் நிலைய பொறுப்பில் உள்ளது. மேற்படி வாகனத்தை மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு அதன் உரிமையாளரிடம் ஒப்படைக்கவும் உத்தரவிடப்படுகிறது.

| வரிசை எண் 1 | காவல் நிலையத்தின் பெயரும் குற்ற எண்ணும் 2 | எதிரியின் பெயர் 3 | எதிரியின் தந்தை பெயர் 4 | எதிரியின் தொழில் 5 | எதிரியின் வசிப்பிடம் 6 | எதிரியின் வயது 7 |
|---|---|---|---|---|---|---|
| A1 | மகாராஜாகடை காவல் நிலையம், கிருஷ்ணகிரி மாவட்டம். குற்ற எண்.317/2019. | சேரன் | ரமேஷ் | - | குப்பமேட்டுத்தெரு, பழையப்பேட்டை, கிருஷ்ணகிரி. | 21 |
| A2 | | சுமன் | சுகுமார் | | குப்பமேட்டுத் தெரு, பழையபேட்டை, கிருஷ்ணகிரி. | 21 |
| A3 | | அருண்குமார் | சிவகுமார் | | க.எண்.1/62, கொத்தபேட்டை காலணி, பழையபேட்டை, கிருஷ்ணகிரி. | 20 |
| A4 | | மின்சாரகண்ணன் | கமல் | | க.எண்.43/78, பகங்காளிதெரு, பழையப்பேட்டை, கிருஷ்ணகிரி. | 20 |

| சம்பவம் நடந்த நாள் | புகார் கொடுத்த நாள் | கைது செய்த நாள் | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | மேல் விசாரணை நாள் | வழக்கு விசாரணை தொடக்க நாள் | வழக்கு விசாரணை முடித்த நாள் | தண்டனை உத்தரவு நாள் | தீர்ப்புரை நகல் எதிரிக்கு சார்வு செய்யப்பட்ட நாள் | காலதாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 08.11.2019 | 09.11.2019 | A1&A2- 09.11.2019 A3&A4- 13.11.2019 | 23.12.2019 | - | | | - | - | அரசு தரப்பில் உரிய நேரத்தில் சாட்சிகள் ஆஜர் செய்யப்படவில்லை. |

<u>மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021-ம் தேதியிட்ட Roc.No.814/2020/RG/F1-ன் படியும் மற்றும் குற்றவியல் நடைமுறை விதிகள், 2019 ன் கீழ் விதி 106(4) ன் படி வழக்கின் சுருக்கம்</u>

| | | |
|---|---|---|
| 1. | எதிரிகள் நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்ட நாள் | A1&A2- 09.11.2019 A3&A4- 13.11.2019 |
| 2. | இறுதியறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 02.12.2020 |
| 3. | முதன்மை பதிவேட்டு வழக்கு மேல் விசாரணைக்கு அனுப்பப்பட்ட நாள் | 16.09.2021 |
| 4. | எதிரிகளிடம் கு.வி.மு.ச. 240/251 பிரிவின் கீழ் வினவிய நாள் | 06.08.2022 |
| 5. | இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பல்வகை மனுக்களின் விவரம் | |

| குற்றப்பல்வகை மனு எண். | உத்தரவு அனுமதிக்கப்பட்டது / தள்ளுபடி செய்யப்பட்டது. | மேல் முறையீட்டு வழக்கு விவரம் |
|---|---|---|
| - | - | -- |

| | | |
|---|---|---|
| 6. | சாட்சிகள் விசாரித்த நாட்களின் விவரம் : | |

| சாட்சிகள் | | முதல் விசாரணை நாள் | குறுக்கு விசாரணை நாள் |
|---|---|---|---|
| அ.சா.1 | திரு.கிருஷ்ணன் | 12.12.2024 | - |
| அ.சா.2 | திரு.மகாதேவன் | 12.12.2024 | 27.03.2025 |
| அ.சா.3 | திரு.ராஜ்குமார் | 12.12.2024 | - |
| அ.சா. 4 | திரு.கௌதம்ராஜ் | 12.12.2024 | 27.03.2025 |
| அ.சா. 5 | திரு.ராஜசேகர் | 12.12.2024 | 27.03.2025 |
| அ.சா. 6 | திரு.வெங்கடேசன் | 20.06.2025 | 20.06.2025 |
| அ.சா. 7 | திரு.ராமமூர்த்தி | 20.06.2025 | 20.06.2025 |
| அ.சா. 8 | திரு.நந்தகுமார் | 21.08.2025 | 21.08.2025 |
| அ.சா. 9 | திரு.மகேந்திரன் | 21.08.2025 | 21.08.2025 |
| அ.சா. 10 | திரு.சண்முகம் | 09.10.2025 | 09.10.2025 |
| அ.சா.11 | திரு.பிரசன்ன பாலாஜி | 29.10.2025 | 29.10.2025 |
| அ.சா.12 | கணேஷ்குமார் | 26.11.2025<br>12.02.2026 | 12.02.2026 |

| | | |
|---|---|---|
| 7. | எதிரிகளிடம் கு.வி.மு.ச. 313(ஆ) பிரிவின் கீழ் வினவப்பட்ட நாள் | 16.02.2026 |
| 8. | எதிரிகள் தலைமறைவு ஆகிய நாட்கள் மற்றும் நீதிமன்றத்தில் ஆஜராகிய/ஆஜர்படுத்தப்பட்ட நாட்கள் | --- |
| 9. | மாண்புமிகு மேலமை நீதிமன்றத்தின் உத்தரவு படி வழக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தால் அதன் விவரம் மற்றும் தீர்வு | --- |

இந்த வழக்கு என் முன்பு 16.03.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த கூடுதல் குற்றத்துறை அரசு பொது வழக்குரைஞர் திரு.சரவணப்பொய்கை அவர்களும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த

வழக்குரைஞர்கள் திரு.எம்.பாஸ்கர், திரு.ஆர்.சுரேஷ் ஆகியோர் முன்னிலையாகி, இருதரப்பிலும் எடுத்துரைத்த வாத உரைகளைக் கேட்டும், சாட்சிய, சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

## தீர்ப்புரை

1. **அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

கடந்த 08.11.2019-ம் தேதி பகல் 12.10 மணிக்கு வாதி தனக்கு சொந்தமான TN-24-AC-4317 என்ற எண்ணுள்ள HONDA ACTIVA இரு சக்கர வண்டியில் சிகரமானபள்ளி கிராமத்தில் வியாபார விசயமாக பேசிவிட்டு வீட்டுக்கு செல்ல வேப்பனப்பள்ளி - நார்லப்பள்ளி வரும் வழியில் கோனேகவுண்டனூர் நிழற்குடையிலிருந்து சுமார் 150 அடி தூரத்தில் உள்ள கல்யாணகுண்டு கனவாய் பஸ் ஸ்டாப் அருகே வந்துக்கொண்டிருந்த போது 1 மற்றும் 2 எதிரிகள் கொள்ளையடிக்கும் நோக்கத்துடன் வாதியை தடுத்து நிறுத்தி கீழே தள்ளி 1ம் எதிரி சேரன் கட்டையால் வாதியை இடதுபக்க தலைமீது தாக்கி சொற்பகாயம் ஏற்படுத்தியும், 2ம் எதிரி சுமன் வாதி வலதுபுற நிக்கர் பாக்கெட்டில் இருந்த பணம் ரூ.25,000/- ஐ பறித்துக்கொண்டும், 3 மற்றும் 4 எதிரிகள் யாராவது வருகிறார்களா என்று பார்த்துக்கொண்டு இருந்ததும் மேற்படி எதிரிகள் அனைவரும் கொள்ளையடிக்கும் நோக்கத்துடன் குற்றம் புரிந்தது சட்டபிரிவு 394 இதச @ 394 r/w 397 இதச-ன் படி தண்டிக்கக்கூடிய குற்றம்புரிந்தவர்களார்கள் என்று எதிரிகள் மீது மகாராஜாகடை காவல் நிலைய

ஆய்வாளரால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மேற்படி குற்ற இறுதி அறிக்கையை பெற்ற குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்து, எதிரிகள் மீதான வழக்கை பி.ஆர்.சி. எண். 20/2020 ஆக கோப்பிற்கு எடுத்து எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி, எதிரிகளுக்கு அரசு தரப்பு ஆவணங்கள், கு.வி.மு.ச.207 பிரிவின் கீழ் நகல்களாக இலவசமாக வழங்கப்பட்டு, அதன்பின்னர் இவ்வழக்கின் எதிரிகளுக்கு எதிரான வழக்கு அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கத்தக்கது என்பதால் வழக்கு மாண்புமிகு கிருஷ்ணகிரி முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு கு.வி.மு.ச. 209(அ) பிரிவின் படி அனுப்பப்பட்டு, மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திலிருந்து இந்நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பப்பட்டுள்ளது. 1 முதல் 4 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 394 r/w 397 ன் கீழ் இந்நீதிமன்றத்தால் குற்றசாட்டுகள் வனைந்து விளக்கிக் கூறி வினவியபோது எதிரிகள் குற்றத்தை மறுத்துரைத்தால் அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

3. இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் 12 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு அ.சா.ஆ. 1 முதல் 16 வரையிலான ஆவணங்கள் மற்றும் சான்றுப் பொருள்கள் சா.பொ.1 முதல் 3 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4. <u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சுருக்கம் பின் வருமாறு</u> ;

அசா.1 திரு.கிருஷ்ணன் தனது சாட்சியத்தில், தான் தற்போது போத்திநாயனப்பள்ளி கிராமத்தில் குடியிருந்து தேங்காய் வியாபாரம் செய்து

வருவதாகவும், சுமார் 5 வருடங்களுக்கு முன்பு காலை சுமார் 12.00 மணியளவில் தனக்கு சொந்தமான ஸ்கூட்டியில் வேப்பனப்பள்ளிக்கு சென்று விட்டு திரும்ப வந்து கொண்டிருந்தபோது நான்கு பேர் தன்னை காட்டு பகுதியில் வழிமறித்து நிறுத்தினார்கள் என்றும், ஏன் வழிமறித்து நிறுத்தினீர்கள் என்று கேட்டதற்கு ஒரு நபர் தன் தலையில் கத்தியால் வெட்டினார் என்றும், அவர் ஆஜர் எதிரி அருண்குமார்(A3) என்று சாட்சி கை நீட்டி அடையாளம் காட்டினார் என்றும், அதன் பிறகு தான் கீழே விழுந்து விட்டேன் என்றும், இரண்டாவது பட்டியல் சாட்சி அங்கிருந்ததாகவும், அவரும் அங்கிருந்தவர்களும் தன்னை எழுப்பி, தண்ணீர் கொடுத்து கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள் என்றும், அப்போது தன்னுடைய பணம் காணாமல் போய் விட்டது என்றும், இது சம்பந்தமாக கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் போலீசார் தன்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள் என்றும், அதிலுள்ள கையெழுத்து தன்னுடையது என்றும், அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

அசா.2 திரு.மகாதேவன் தனது சாட்சியத்தில், தான் தற்போது சிந்தகம்பள்ளி கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருவதாகவும், அ.சா.1 கிருஷ்ணன் தனக்கு தெரியும் என்றும், கடந்த 08.11.2019 ஆம் தேதி மதியம் 12.00 மணிக்கு மேல் இருக்கும் என்றும், கூலி ஆட்கள் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தார்கள் என்றும், தான் அவர்களை பார்த்துக் கொண்டிருந்தேன் என்றும், அப்போது அ.சா.1 தலையில் அடிபட்டு இரத்தம் வழிந்து கொண்டு வந்திருந்தார் என்றும், என்ன நடந்தது என்று கேட்டதாகவும், அதற்கு அவர்

வியாபாரத்திற்கு போய் விட்டு திரும்ப வரும் போது வண்டியை தள்ளி விட்டு, பணத்தை பிடிங்கி சென்று விட்டதாக கூறினார் என்றும், அவருக்கு தண்ணீர் தந்து, தன்னுடைய வாகனத்தை கொடுத்து அவருடைய மகன்களை அழைத்து வரச் சொல்லி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், இது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

அசா.3 திரு.ராஜ்குமார் தனது சாட்சியத்தில், தான் தற்போது போத்திநாயனப்பள்ளி கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருவதாகவும், அ.சா.1 கிருஷ்ணன் தனது அப்பா ஆவார். அ.சா.2 மகாதேவனையும் தனக்கு தெரியும் என்றும், கடந்த 08.11.2019 ஆம் தேதி தனது ஊரில் இருந்த போது மதியம் சுமார் 12.00 மணியளவில் மகாதேவன் தனக்கு போன் செய்து, உனது அப்பாவை அடித்து விட்டார்கள், இரத்த காயம் ஏற்பட்டுள்ளது, அவர் தோட்டத்தில் உள்ளார் என்று தகவல் சொன்னதாகவும், தான் சென்று பார்த்தபோது தலையில் இரத்த காயம் ஏற்பட்டு உடல் முழுவதும் இரத்தம் சிந்திய நிலையில் இருந்தாகவும், என்ன நடந்தது என்று கேட்டேன் என்றும், அவர் காலை 09.00 மணியளவில் அவருடைய இரு சக்கர வாகனத்தில் வேப்பனப்பள்ளிக்கு தேங்காய் வியாபாரத்திற்கு சென்று விட்டு, திரும்பி வந்த போது, வேப்பனப்பள்ளிக்கு அருகே கோணேகவுண்டனூர் வழியாக வரும் போது, கல்யாண குட்டை என்ற இடத்தில் நான்கு பேர் அந்த இடத்தில் வந்து மழுவால் தலையில் வெட்டினார்கள் என்றும், அவர் தன்னுடைய underwear பாக்கெட்டில் வைத்திருந்த வியாபாரத்திற்காக எடுத்துச் சென்ற ஆள் இல்லை என்று திருப்பி கொண்டு வந்த ரூ.25,000/- பணத்தை எடுத்துச் சென்று விட்டதாக சொன்னார்

என்றும், அதன் பிறகு அவரை கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றோம் என்றும், அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தோம் என்றும், அந்த சம்பவத்திற்கு பிறகு தனது தகப்பனாருக்கு paralysis attack ஏற்பட்டது என்றும், அதன் பிறகு அவர் ஊனமாகி விட்டார் என்றும், தன் தகப்பானரின் ஸ்கூட்டி வாகன எண்.TN 24 AC 4317 என்றும், மேற்படி தொகையை நாங்கள் நீதிமன்றம் மூலமாக திரும்ப பெற்றுக் கொண்டோம் என்றும், இது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

அசா.4 திரு.கௌதம்ராஜ் தனது சாட்சியத்தில், தான் தற்போது போத்திநாயனப்பள்ளி கிராமத்தில் குடியிருந்து Dairy farming நடத்தி வருவதாகவும், அ.சா.1 கிருஷ்ணன் தனது தாத்தா என்றும், அ.சா.3 ராஜ்குமார் தனது மாமா என்றும், கடந்த 08.11.2019 அன்று தான் கிருஷ்ணகிரி டவுனில் இருந்த போது அ.சா.3 தனக்கு போன் செய்தார் என்றும், அப்போது மணி 12.00 லிருந்து 01.00 மணி இருக்கும் என்றும், போன் செய்து அ.சா.1 க்கு அடிப்பட்டிருப்பதாகவும், உடனே கிளம்பி வருமாறும் சொன்னதாகவும், அ.சா.2 தோட்டத்திற்கு போனோம், தாத்தா அங்கு தான்இருந்தார் என்றும், என்ன நடந்தது என்று கேட்ட போது கத்தியால் தலையில் தாக்கிவிட்டு பணத்தை எடுத்துச் சென்றதாக சொன்னார் என்றும், பின்னர் அவரை கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் சேர்த்தோம் என்றும், இது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

அசா.5 திரு.ராஜசேகர் தனது சாட்சியத்தில், தான் தற்போது

போத்திநாயனப்பள்ளி கிராமத்தில் குடியிருந்து பந்தல் அலங்காரம் தொழில் செய்து வருவதாகவும், அ.சா.1 கிருஷ்ணன் தனது தாத்தா என்றும், கடந்த 08.11.2019 ஆம் தேதி தனது வீட்டில் இருந்த போது பகல் 12.30 மணிக்கு உறவினர் தேவன் என்கிற தக்காளி தேவன் தனக்கு போன் செய்து உன் தாத்தாவை யாரோ அடித்து போட்டிருக்கிறார்கள், தலையில் இரத்த காயம் ஏற்பட்டிருக்கிறது, மருத்துமவனைக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்று சொன்னார் என்றும், பின்னர் சம்பவ இடம் சென்று அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம் என்றும், இது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

அசா.6 திரு.வெங்கடேசன் தனது சாட்சியத்தில், தான் தற்போது போதிநாயனப்பள்ளி கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருவதாகவும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து தன்னுடையது என்றும், அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2 என்றும், மேற்படி கையெழுத்தை தான் கடந்த 08.11.2019 ஆம் தேதி காலை சுமார் 08.00 - 08.30 மணியளவில் தானும் ராமமூர்த்தி என்பவரும் இரு சக்கர வாகனத்தில் மகாராஜா கடை சென்று விட்டு வேப்பனப்பள்ளியில் உள்ள ராமமூர்த்தியின் உறவினர் வீட்டிற்கு சென்று கொண்டிருந்த போது, சக்கனாவூருக்கு செல்லும் வழியில் உள்ள நிழற்கூடம் அருகே வைத்து போலீசாரிடம் செய்து கொடுத்ததாகவும், அங்கு போலீசார் வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள் என்றும், நாங்கள் அங்கே சென்றோம் என்றும், வி.கிருஷ்ணன் என்பவருக்கு அடிபட்டது சம்பந்தமாக தன்னிடம் கையெழுத்து கேட்டார்கள் என்றும், தன்னை விசாரித்து

போலீசார் கையெழுத்து பெற்றார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

அசா.7 திரு.ராமமூர்த்தி தனது சாட்சியத்தில், தான் தற்போது M.C.பள்ளி கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருவதாகவும், அ.சா.6 வெங்கடேசன் தனது நண்பர் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து தன்னுடையது என்றும், அந்த கையெழுத்து அ.சா.ஆ.3 என்றும், மேற்படி கையெழுத்தை தான் கடந்த 09.11.2019 அன்று காலை 08.00 – 08.30 மணியளவில் மகாராஜா கடையிலிருந்து வேப்பனப்பள்ளிக்கு செல்லும் வழியில் சக்கனாவூரிலிருந்து வேப்பனப்பள்ளி பிரியும் ரோட்டின் அருகே இருக்கும் பேருந்து நிறுத்தத்தில் வைத்து செய்து கொடுத்தேன் என்றும், அங்கு போலீசார் வரைபடம் வரைந்து போதிநாயனப்பள்ளி வி.கிருஷ்ணன் என்பவரை சில பேர் அடித்தது சம்பந்தமாக விசாரிப்பதாக சொல்லி கையெழுத்து வாங்கினார்கள் என்றும், இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.8 திரு.நந்தகுமார் தனது சாட்சியத்தில், தான் தற்போது போத்திநாயனப்பள்ளியில் குடியிருந்து மேஸ்திரி வேலை செய்து வருவதாகவும், எதிரிகளை தெரியாது என்றும், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர்களில் சாட்சியாக உள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையது என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.4 என்றும், கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.5 (4 வரிசைகள்) என்றும், சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒசூரில் இருந்து எங்கள் ஊரான போத்திநாயனப்பள்ளிக்கு இரு சக்கர வாகனத்தில் சென்ற போது, ஜீஸ் பேக்டரி

அருகில் போலீசார் தன்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றும், எதற்காக போட்டேன் என்றால் தானும் கேட்கவில்லை, அவர்களும் சொல்லவில்லை என்றும், தான் மட்டும் கையெழுத்து போட்டேன் என்று பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.9 திரு.மகேந்திரன் தனது சாட்சியத்தில், தான் தற்போது மாதிநாயனப்பள்ளியில் குடியிருந்து விவசாயம் வேலை செய்து வருவதாகவும், அ.சா.8 நந்தகுமாரைத் தெரியும் என்றும், எதிரிகளை தெரியாது என்றும், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர்களில் சாட்சியாக உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையது என்றும், சுமார் 2, 3 வருடங்களுக்கு முன்பு எங்கள் ஊரில் மாதேனபள்ளியில் இருந்து கிருஷ்ணகிரிக்கு இரு சக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தேன் என்றும், மகாராஜா கடை போலீசார் தன்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றும், எதற்காக போட்டேன் என்றால் தானும் கேட்கவில்லை, அவர்களும் சொல்லவில்லை என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அந்த கையெழுத்து அ.சா.ஆ.6 என்றும், கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.7 (4 வரிசைகள்) என்றும் பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

அசா.10 திரு.சண்முகம் தனது சாட்சியத்தில், தான் 31.03.2020 ஆம் தேதி கிருஷ்ணகிரி மாவட்டம், மகாராஜா கடைகாவல் நிலைய காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது சேலம் மாவட்டத்தில் குடியிருந்து வருவதாகவும், கடந்த 08.11.2019 ஆம் தேதி கிருஷ்ணகிரி மாவட்டம், அரசு தலைமை மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற AR Intimation

படி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கிருஷ்ணன், த/பெ.வெங்கடேசன் நாயுடு என்பவரிடம் 08.11.2019 இரவு வாக்குமூலம் பெற்றும், 09.11.2019 காலை 08.30 மணிக்கு மேற்படி காவல் நிலைய குற்ற எண்.317/2019 சட்டப்பிரிவுகள் 394(NP) IPC ஆக வழக்கு பதிவு செய்ததாகவும், முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் வாதியின் புகார் நகலையும், குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.II, கிருஷ்ணகிரி அவர்களுக்கு அனுப்பியும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்ததாகவும், தான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.8 என்றும், வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்காக சம்பந்தப்பட்ட காவல் ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்ததாகவும், இது சம்பந்தமாக ஆய்வாளர் தன்னை விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

அசா.11 திரு.பிரசன்ன பாலாஜி தனது சாட்சியத்தில், தான் தற்போது சிதம்பரத்தில் உள்ள கடலூர் மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரியில் போதகராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 08.11.2019 அன்று கிருஷ்ணகிரி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் பணிபுரிந்து கொண்டிருக்கும் போது, அன்று மதியம் 02.45 மணியளவில் கிருஷ்ணன், வயது 66, த/பெ.வெங்கடேஷ் நாயுடு, மகாராஜா கடைரோடு, கொத்திநாயனப்பள்ளி, கிருஷ்ணகிரி என்பவர் தன்னுடன் ராஜ்குமார் என்பவரை அழைத்துக் கொண்டு வந்து 08.11.2019 அன்று மதியம் 12.45 மணியளவில் நாரணப்பள்ளி சாலை, கோனேக்காவனூர் அருகே தன்னை அடையாளம் தெரியாத நான்கு நபர்கள் மரக்கட்டை, கத்தி மற்றும் அரிவாளால் தாக்கியதாக கூறியதாகவும், மேலும் அவருக்கு வலது தோள்பட்டை

மற்றும் உடல் முழுவதும் வலி இருப்பதாக கூறினார என்றும், அவரை பரிசோதனை செய்ததில் அவருக்கு 1.தலையின் இடது பக்கத்தில் 6X1X0.5 செ.மீ. அளவில் கிழிந்த காயம் காணப்பட்டது என்றும், 2. முகத்தின் அருகே சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டது.அவரை உள்நோயாளியாக அனுமதித்து தலைக்கு CT Scan மற்றும் எலும்பு அறுவை சிகிச்சை நிபுணர் பார்வைக்கு பரிந்துரை செய்ததாகவும், மேலும் 22.11.2019 அன்று மேற்கூறிய காயங்களான 1 மற்றும் 2 சாதாரண காயம் என சான்றளித்தேன் என்றும், இது குறித்து தான் காயச்சான்று வழங்கினேன் என்றும், அந்த காயச்சான்று அ.சா.ஆ.9 என்றும், இது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரணை செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

அசா.12 திரு.கணேஷ்குமார் தனது சாட்சியத்தில், தான் தற்போது தேன்கனிக்கோட்டை காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், அதற்கு முன்பாக 09.11.2019 ஆம்தேதி மகாராஜா கடை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் திரு.சண்முகம் என்பவர் நிலைய அலுவலில் இருந்த போது, கிருஷ்ணகிரி அரசு தலைமை மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கிருஷ்ணன், வயது 66, த/பெ.வெங்கடேஷ் நாயுடு, போத்திநாயனப்பள்ளி என்பவரிடம் இருந்து பெற்று வந்த வாக்குமூலத்தின் பெயரில் மகாராஜா கடை காவல் நிலைய குற்ற எண்.317/2019, சட்டப்பிரிவுகள் 394 இதச வாக பதிவு செய்யப்பட்ட வழக்கினை தான் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றே காலை 09.45 மணிக்கு வழக்கின் சம்பவ இடமான வேப்பனப்பள்ளி - மகாராஜா கடை ரோட்டில் கல்யாணகுண்டு கணவாய் பஸ் ஸ்டாப் அடுத்து உள்ள சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் தயார்

செய்ததாகவும், சாட்சிகள் வெங்கடேசன், ராமமூர்த்தி ஆகியோர் முன்பாக பார்வை மகசர் தயார் செய்ததாகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.10 என்றும், பின்னிட்டு மருத்துவமனை சிகிச்சையில் இருந்த வாதி கிருஷ்ணன், அவரை மருத்துவமனையில் சேர்த்த மகாதேவன்,ராஜ்குமார் ஆகியோர்களையும் கௌதம் ராஜ், ராஜசேகர், கிருஷ்ணன் ஆகியோர்களையும் மற்றும் மகசர் சாட்சிகளையும் விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இவ்வழக்கு தொடர்பாக எதிரிகளை தேடி வந்த நிலையில் 13.11.2019 ஆம் தேதி காலை 06.30 மணிக்கு மகாராஜா கடை - கிருஷ்ணகிரி செல்லும் ரோட்டில் உள்ள ஆத்துக்கால்வாய் பிரிவு ரோட்டில் வாகன சோதனை செய்து கொண்டிருந்த போது, கிருஷ்ணகிரி பக்கம் 2 இரு சக்கர வாகனத்தில் வந்த நபர்களை விசாரிக்க அவர்கள் 1.சேரன், வயது 21, த/பெ.ரமேஷ், பழையபேட்டை, 2.அருண்குமார், வயது 20, த/பெ.சிவக்குமார், 3.மின்சாரக்கண்ணன், வயது 20, த/பெ.கமல், 4.சுமன், வயது 20, த/பெ.சத்யா அனைவரும் பழையபேட்டை சேர்ந்தவர்கள் என கூறினார்கள் என்றும், அவர்களை விசாரிக்க அனைவரும் தாங்கள் தான் குற்றத்தை செய்ததாக எவ்வித ஆசை வார்த்தையும், அச்சுறுத்தலும் இன்றி ஒப்புக்கொண்டார்கள் என்றும், சேரன் என்பவர் தனது ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் நந்தகுமார், மகேந்திரன் ஆகியோர் முன்பாக எந்த வித அச்சுறுத்தலும், ஆசை வார்த்தைகளும் இல்லாமல் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கடந்த 09.11.2019 அன்று பகல் 12.00 மணி அளவில் மகாராஜா கடை - வேப்பனப்பள்ளி செல்லும் ரோட்டில் கல்யாணகுண்டு கணவாய் பஸ் ஸ்டாப் அருகில் வேப்பனப்பள்ளி பக்கம்இருந்து வந்த சுமார் 70

வயது மதிக்கத்தக்க அ.சா.1 கிருஷ்ணன் என்பவரை வாகனத்திலிருந்து கீழே தள்ளி தலையில் கட்டையால் அடித்து காயம் ஏற்படுத்தி பணத்தை எடுத்துச் சென்றதாகவும் ஒப்புக் கொண்டார்கள். மேலும் அவரின் வாக்குமூலத்தில் என்னை அழைத்து சென்றால், நான் கல்யாணகுண்டு கணவாய் பஸ் ஸ்டாப் அருகே ஒரு நபரை அடித்து பணம் பறித்த இடத்தை அடையாளம் காட்டியும், நான் பெரியவரை அடிக்க பயன்படுத்திய கட்டையையும், பணம் ரூ.25,000/- மறைத்து வைத்துள்ள இடத்தை அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்வதாக சொன்ன வாக்குமூலத்தை தலைமைக் காவலர் 1443 கன்னிகா என்பவரால் மடிக்கணினியில் எதிரி தன்னிடம் சொல்ல சொல்ல தன் மூலமாக கணினியில் தலைமைக் காவலர் மூலம் பதிவு செய்யப்பட்டதாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.11 என்றும், அதன் தொடர்ச்சியாக, சாட்சிகள் நந்தகுமார், மகேந்திரன் ஆகியோர் முன்பாக எதிரி அருண்குமார் என்பவரிடம் விசாரித்து அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் யாருடைய வற்புறுத்தலும் இன்றி கொடுத்தார் என்றும், அவருடைய ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால், தான் கல்யாணகுண்டு கணவாய் பஸ் ஸ்டாப் அருகே அ.சா.1யை அடித்து பணம் பறித்த இடத்தை அடையாளம் காட்டியும், அதன் தொடர்ச்சியாக டிப்பர் லாரியை நிறுத்தி டிரைவரை கீழே இறக்கி கத்தியை காட்டி மிரட்டி பணம் ரூ.15,000/- கொள்ளையடித்த இடத்தையும், அச்சம்பவத்தின் போது பயன்படுத்திய கத்தியையும், கறுப்பு கலர் vivo செல்போனையும் மறைத்து வைத்துள்ள இடத்தையும் அடையாளம் காட்டுகிறேன் என்று சொன்னார் என்றும், அந்த

ஒப்புதல் வாக்குமூலத்தை தன் முன்னிலையில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை தன்னால் மேற்படி தலைமைக் காவலர் கன்னிகா என்பவர் மூலம் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டது என்றும், மேற்படி ஒப்புதல் வாக்குமூலங்களில் எதிரியும், மேற்கண்ட சாட்சிகளும் கையொப்பம் இட்டனர் என்றும், இந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.12 என்றும், அதன் தொடர்ச்சியாக சாட்சிகள் முன்பாக எதிரி சுமன் என்பவரிடம் இருந்து TN 24 Q 8182 என்ற Bajaj Discover மோட்டார் சைக்கிள் 09.00 மணிக்கு மகசரில் கைப்பற்றியதாகவும், அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.13 என்றும், எதிரி அருண்குமார் என்பவரிடம் இருந்து TN 24 AM 1751 என்ற எண்ணுள்ள Yamaha FZ வாகனம் அதே சாட்சிகள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றப்பட்டது என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.14 என்றும், அதன் தொடர்ச்சியாக, அதே சாட்சிகள் மற்றும் எதிரிகளுடன் கிருஷ்ணகிரி, பழையபேட்டை குப்பமேட்டு தெருவில் உள்ள சேரன் வீட்டில் சூட்கேசில் மறைத்து வைத்திருந்த பணம் ரூ.25,000/- (ஐந்நூறு ரூபாய் நோட்டுகள்), சுமார் 2 அடி நீளம் உள்ள மரக்கட்டை ஒன்றையும் எதிரி சேரன் எடுத்து ஆஜர் செய்ததை மகசரில் கைப்பற்றினேன் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.15 என்றும், ரூ.25,000/- பணத்திற்கான புகைப்படம் சா.பொ.1 என்றும், மேற்படி எதிரிகளுடன் 12.30 மணிக்கு காவல் நிலையம் வந்து முறைப்படி திரேக சோதனை செய்தும், முறைப்படி பாரா காவலர் வசம் ஒப்படைக்கப்பட்டும் மருத்துவ பரிசோதனை மற்றும் உணவு கொடுத்தும் உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின் படி வழிநடத்தியும் கைப்பற்றப்பட்டதை படிவம் 91 இன் மூலம்

நீதிமன்றத்திற்கு எதிரிகளுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன் என்றும், படிவம் 91 அ.சா.ஆ.16 என்றும், இவ்வழக்கின் சாட்சியாக இருந்த நந்தகுமார், மகேந்திரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், மருத்துவ சிகிச்சை அளித்த மருத்துவர் பிரசன்னபாலாஜி என்பவரை விசாரித்து காயச்சான்றிதழ் பெற்றேன் என்றும், எதிரிகள் சேரன், சுமன், அருண்குமார், மின்சாரக்கண்ணன் ஆகியோர்களை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்ததாகவும், தன்னுடைய புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது 394 இதசவிலிருந்து பிரிவு மாற்றம் செய்து 394 r/w 397 ஆக பிரிவு மாற்றம் செய்தேன் என்றும், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட பொருட்களான பணம் ரூ.25,000/-, மரக்கட்டை, இரு சக்கர வாகனம் பதிவு எண். TN 24 Q 8182 ஆகியவற்றை நீதிமன்றத்திற்கு அனுப்பி C.P.No.3/2020 ஆக கொடுக்கப்பட்டதாகவும், இவ்வழக்கில் எதிரி சேரன் என்பவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட சுமார் 2 அடி நீளமுள்ள கட்டை தன்னிடம் காட்டப்படுவது என்றும், அந்த மரக்கட்டை சா.பொ.2 என்றும், எதிரி சுமன் என்பவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட TN 24 Q 8182 என்ற Bajaj Discover வாகனத்தின் புகைப்படம் சா.பொ.3 என்றும், தனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது 394 r/w 397 இதச பிரிவின் கீழ் இறுதி அறிக்கை கிருஷ்ணகிரி, குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.II அவர்களிடம் தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

5. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு எதிரான சங்கதிகள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1) (அ)-ன் கீழ் வினவியபோது எதிரி சாட்சிகளின் சாட்சியங்களை மறுத்தார்கள். எதிரி தரப்பில்

சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

6. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இந்நீதிமன்றத்தால் 1 முதல் 4 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 394 r/w 397-ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

7. பிரச்சனைக்கான தீர்வு

அரசு தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய அசா.1 முதல் 12 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு அசாஆ.1 முதல் 16 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8. இவ்வழக்கில் புகார்தாரர் அசா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் சுமார் 5 வருடங்களுக்கு முன்பு பகல் 12 மணியளவில் அவருக்கு சொந்தமான ஸ்கூட்டியில் வேப்பனப்பள்ளிக்கு சென்று விட்டு திரும்பி வந்துகொண்டிருந்தபோது நான்கு பேர் காட்டு பகுதியில் வழிமறித்து நிறுத்தினார்கள் என்றும், அதில் ஒருவர் அவர் தலையில் கத்தியால் வெட்டியதாகவும், அவர் ஆஜர் எதிரி அருண்குமார் என்று கைநீட்டி அடையாளம் காட்டியும் அதன் பிறகு அவர் கீழே விழுந்துவிட்டதாகவும், அங்கிருந்தவர்கள் தண்ணீர் கொடுத்து கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் அப்போது என்னுடைய பணம் காணாமல் போய்விட்டது என்றும், இது சம்மந்தமாக கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் போலீசார் அவரிடம் புகார் வாக்குமூலம் பெற்றதாகவும் புகார் வாக்குமுலம் அசாஆ.1

என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இவரின் சாட்சியத்தின் மூலம் ஒரு நபர் தலையில் கத்தியால் வெட்டினார் என்றும் அவர் ஆஜர் மூன்றாம் எதிரி அருண்குமார் என்றும், கூறியுள்ளது அறியமுடிகிறது. ஆனால் அரசு தரப்பில் கத்தி எதுவும் கைபற்றப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவில்லை. மேலும் அசா.1 கொடுத்த புகார் வாக்குமூலத்தில் அடையாளம் தெரியாத 4 நபர்கள் இரு சக்கர வாகனத்தில் வந்து அவரை வழிமறித்து அவரது இடது பக்க தலையில் கட்டையால் தாக்கியதாக கூறியுள்ளார். ஆனால் முதல் விசாரணையில் கத்தியால் தாக்கியதாக முரண்பட்டு கூறியுள்ளார். இதிலிருந்து பார்க்கும்பொழுது அசா.1ன் சாட்சியம் சம்பவம் நடந்த விதத்தை பொறுத்து நிரூபிக்கும் வகையில் அமையவில்லை.

9. அசா.2 அவரது சாட்சியத்தில் சுமார் 5 வருடத்திற்கு முன்பு தோட்டத்தில் இருக்கும்பொழுது அசா.1 தலையில் அடிபட்டு வந்ததாகவும், அவர் வியாபாரத்திற்கு போய்விட்டு திரும்பி வரும்பொழுது வண்டியை தள்ளிவிட்டு பணத்தை பிடுங்கி சென்றுவிட்டதாக கூறினார் என்றும், அவருக்கு தண்ணீர் கொடுத்து அவரது மகன்களை வர சொல்லி மருத்துமவனைக்கு அனுப்பி வைத்ததாகவும் கூறியுள்ளார். மேலும் அசா.3 அசா.1ன் மகன் ஆவார். அசா.4 மற்றும் 5 அசா.1ன் பேரன்கள் ஆவர். அவர்கள் தங்கள் சாட்சியத்தில் அசா.1 வியாபாரத்திற்கு சென்றுவிட்டு திரும்பி வரும்போது கத்தியால் தலையில் தாக்கிவிட்டு பணத்தை எடுத்து சென்றுவிட்டதாக சொன்னதாகவும் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் சேர்த்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்கள். இவர்கள் சம்பவத்தை கேள்விப்பட்டு வந்து

மருத்துவமனையில் சேர்த்ததைப் பொறுத்து சாட்சியம் அளித்துள்ளார்கள்.

10. அசா.1 கொடுத்த புகார் வாக்குமூலம், அசா.2 மற்றும் 3 கொடுத்த 161 (3) வாக்குமூலங்களில் இருந்து பார்க்கும்பொழுது சம்பவத்தில் ஈடுபட்ட நபர்கள் அடையாளம் தெரியாத 4 நபர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளதும் அதனடிப்படையில் முதல் புலன் விசாரணை அதிகாரியால் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதும் அறிய முடிகிறது. ஆனால் அசா.12 ஆன விசாரணை அதிகாரி 1 மற்றும் 3 எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் அசாஆ.11 மற்றும் 12 ன் அடிப்படையில் தான் எதிரிகளுக்கு எதிராக இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் இவ்வழக்கில் அசாஆ.11 மற்றும் 12 ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டுமே அடிப்படையாக கொண்டு எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

11. மேலும் அசா.1 நீதிமன்ற சாட்சியத்தில் தான் முதல் முறையாக மூன்றாவது எதிரியை அடையாளம் காட்டியுள்ளார். அவர் சாட்சியம் அளிப்பதற்கு முன்பு எதிரிகளை விசாரணை செய்து எங்கும் அடையாளம் காட்டவில்லை. மேலும் அசா.12 விசாரணை அதிகாரியும் எதிரிகளை அடையாளம் காண்பிப்பதற்காக முறையான அடையாள அணிவகுப்பு நடத்தி அசா.1 ன் மூலம் எதிரிகளை அடையாளம் காண எவ்வித முயற்சிகளும் மேற்கொள்ளவில்லை. இவ்வழக்கில் சம்பவத்தை கண்ணுற்ற ஒரே சாட்சி அசா.1 மட்டுமே ஆவார். இதர சாட்சிகள் யாரும் சம்பவத்தை பொறுத்து கேள்விப்பட்டு தகவல் அளித்ததன் மூலம் சாட்சியம் அளித்துள்ளனர். அவ்வாறு உள்ள சூழ்நிலையில் சம்பவத்தை நேரில் பார்த்த அசா.1 ன் மூலம் எதிரிகளுக்கு எதிராக குற்ற அறிக்கை தாக்கல்

செய்வதற்கு முன்பு அசா.12 விசாரணை அதிகாரி எதிரிகள் தான் இச்சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்பதை பொறுத்து முறையான அடையாள அணிவகுப்பு நடத்தி அடையாளம் கண்டு இருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு அடையாளம் காண முயற்சி மேற்கொள்ளாதது இவ்வழக்கின் புலன் விசாரணையை பாதிப்படைவதாக உள்ளது.

12. மேலும் அசா.6 மற்றும் 7 ஆக விசாரிக்கப்பட்டுள்ளவர் பார்வை மகசரில் சாட்சி கையொப்பம் இட்ட நபர்கள் ஆவர். அதில் அசா.6 தன்னுடைய சாட்சியத்தில் 08.11.2019 ம் தேதி காலை 8.00 – 8.30 மணியளவில் அவரும் ராமமூர்த்தியும் இரு சக்கர வாகனத்தில் உறவினர் வீட்டிற்கு சென்று கொண்டிருந்தபோது சக்னாவூருக்கு செல்லும் வழியில் நிழற்கூடம் அருகே போலீசார் வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள், கிருஷ்ணன் என்பவருக்கு அடிபட்டது சம்மந்தமாக கையெழுத்து கேட்டார்கள் என்னை விசாரித்து தான் போலீசார் கையெழுத்து பெற்றார்கள் பார்வை மகசர் அசாஆ.2 என்று சாட்சியம் அளித்துள்ளார். அசா.7 -ம் அவரின் சாட்சியத்தில் 09.11.2019 அன்று காலை 8.00 -8.30 மணியளவில் வேப்பனப்பள்ளி பிரிவு ரோட்டின் அருகே இருக்கும் பேருந்து நிறுத்தத்தில் போலீசார் வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள். கிருஷ்ணன் என்பவரை சில பேர் அடித்தது சம்மந்தமாக விசாரித்ததாக சொல்லி கையெழுத்து வாங்கினார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். இவர்களின் சாட்சியத்தை வைத்து பார்க்கும்பொழுது சம்பவ இடத்தில் தான் பார்வை மகசர் அசாஆ.2 தயார் செய்யப்பட்டுள்ளது தெளிவாகிறது.

13. மேலும் அரசு தரப்பில் அசா.8 மற்றும் 9 எதிரி சேரன் மற்றும்

அருண்குமார் ஆகியோர் தானாக முன்வந்து கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் சாட்சி கையொப்பம் இட்ட நபர்கள் என்று விசாரிக்கப்பட்டுள்ளனர். அவர்களது சாட்சியத்தில் கைப்பற்றுதல் மகசர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பங்கள் தங்களுடையது தான் என்றும், எதிரிகளை தெரியாது, சுமார் 4 வருடங்களுக்கு முன்பு இரு சக்கர வாகனத்தில் ஜீஸ் பேக்டரி அருகே போலீசார் கையெழுத்து வாங்கினார்கள் எதற்காக போட்டேன் என்று நானும் கேட்கவில்லை அவர்களும் சொல்லவில்லை என்று பிறழ் சாட்சியம் அளித்துள்ளதை வைத்துப் பார்க்கும்பொழுது இவர்கள் முன்னிலையில் சான்று பொருள்கள் கைப்பற்றப்பட்டதாகவும், கைப்பற்றுதல் மகசர் தயார் செய்யப்பட்டதாகவும் அரசு தரப்பில் கூறியுள்ள கூற்று நம்பும்படியாக இல்லை. ஆகவே அரசு தரப்பு சான்று பொருள் கைபற்றிய விதத்தையும், அசா.8 மற்றும் 9 முன்னிலையில் தான் 1 மற்றும் 3ம் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது என்பதையும் நிரூபிக்க தவறியதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

14. மேலும் 1 மற்றும் 3ம் எதிரியிடம் பெற்றதாக கூறப்படும் ஒப்புதல் வாக்குமூலமும் நிரூபிக்கப்படாத சூழ்நிலையில், ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் சட்டபிரிவு மாறுதல் செய்து, எதிரிகளை இவ்வழக்கில் சேர்த்துள்ளதும் ஏற்புடையதாக இல்லை. மேலும் அடையாள அணிவகுப்பை முறையாக நடத்தி அடையாளம் காணப்படாத சூழ்நிலையில் எதிரிகள் தான் இச்சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்பதை அரசு தரப்பு தெளிவுபட நிரூபிக்கவில்லை.

15. மேலும் அசா.12 விசாரணை அதிகாரி ஒப்புதல் வாக்குமூலத்தை கணினியில் தட்டச்சு செய்ததாகவும் அவ்வாறு தட்டச்சு செய்தவர் Data Entry Operator கன்னிகா என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் ஒப்புதல் வாக்குமூலத்தை தட்டச்சு செய்த தலைமை காவலர் கன்னிகா என்பவரை இந்நீதிமன்றத்தில் முன்னிலைபடுத்தி விசாரிக்கப்படவில்லை.

16. அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட கண்ணுற்ற சாட்சியான அசா.1 எதிரிகள் தான் சம்பவத்தில் ஈடுபட்ட நபர்கள் என எடுத்துரைக்கும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் அசா.2 முதல் 5 மற்றும் 8 முதல் 11 வரையிலான சாட்சிகளும் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டை சந்தேகக்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை. எனவே அசா.6, 7 மற்றும் விசாரணை அதிகாரியான அசா.12 ன் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கும் வகையில் எடுத்துக் கொள்ள இயலாது. எனவே எதிரிகள் தான் மேற்படி சம்பவத்திற்கு காரணம் என்று எதிரிகளுக்கு எதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டை அரசு தரப்பு தெளிவுற நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை விடுதலை செய்வதே நீதியின் நலனுக்கு உகந்ததாகும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

17. இறுதியாக 1 முதல் 4 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 394 r/w 397 ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 248 (1) ன் கீழ்

விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது.

18. எதிரிகள் மற்றும் பிணையதாரர்கள் எழுதி கொடுத்த பிணை ஆவணத்தை மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு இரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு சொத்துகளான சா.பொ.1 – ரூ25,000/- பணத்தை ஏற்கனவே அசா.1ன் வசம் இடைக்காலமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே இடைக்கால உத்தரவை இறுதி உத்தரவாக்கியும், மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு அசா.1டம் ஒப்படைக்கப்பட்ட பொருட்களை அவரே வைத்துக்கொள்ளலாம் என்றும், இது குறித்து கொடுக்கப்பட்ட பிணைப்பத்திரம் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்யத்தக்கது என்றும், சா.பொ.2 – சுமார் 2 அடி நீளமுள்ள மரக்கட்டையை மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்கவும், சா.பொ.3 – புகைப்படத்தில் உள்ள TN 24 Q 8182 என்ற Bajaj Discover என்ற வாகனம் காவல் நிலைய பொறுப்பில் உள்ளது. மேற்படி வாகனத்தை மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு அதன் உரிமையாளரிடம் ஒப்படைக்கவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் செய்து தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025-ம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M SANTHI
CHIEF JUDICIAL MAGISTRTE KRISHNAGIRI
Digitally signed by M SANTHI

உதவி அமர்வு நீதிபதி/தலைமை நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.

***இணைப்பு :-***

**அரசு தரப்பு சாட்சிகள்:-**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | --- | திரு.கிருஷ்ணன் |
| அ.சா.2 | --- | திரு.மகாதேவன் |
| அ.சா.3 | --- | திரு.ராஜ்குமார் |
| அ.சா. 4 | --- | திரு.கௌதம்ராஜ் |
| அ.சா. 5 | --- | திரு.ராஜசேகர் |
| அ.சா. 6 | --- | திரு.வெங்கடேசன் |
| அ.சா. 7 | --- | திரு.ராமமூர்த்தி |
| அ.சா. 8 | --- | திரு.நந்தகுமார் |
| அ.சா. 9 | --- | திரு.மகேந்திரன் |
| அ.சா. 10 | --- | திரு.சண்முகம் |
| அ.சா.11 | --- | திரு.பிரசன்ன பாலாஜி |
| அ.சா.12 | --- | கணேஷ்குமார் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:-**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | --- | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | --- | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.3 | --- | பார்வை மகசரில் உள்ள 2-வது சாட்சி கையெழுத்து |
| அ.சா.ஆ.4 | --- | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அசா.8 ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.5 | --- | கைப்பற்றுதல் மகசரில் உள்ள அசா.8 ன் கையெழுத்து (4 வரிசைகள்) |
| அ.சா.ஆ.6 | --- | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அசா.9 ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.7 | --- | கைப்பற்றுதல் மகசரில் உள்ள அசா.9 ன் கையெழுத்து (4 வரிசைகள்) |
| அ.சா.ஆ.8 | --- | முதல் தகவல் அறிக்கை |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.9 | --- | காயச்சான்று |
| அ.சா.ஆ.10 | --- | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.11 | --- | ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.12 | --- | ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.13 | --- | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.14 | --- | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.15 | --- | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.16 | --- | படிவம் 91 |

**அரசு தரப்பு சான்று பொருட்கள் :-**

| | | |
|---|---|---|
| சா.பொ.1 | --- | ரூ.25,000/- பணத்திற்கான புகைப்படம் |
| சா.பொ.2 | --- | சுமார் 2 அடி நீளமுள்ள மரக்கட்டை |
| சா.பொ.3 | --- | TN 24 Q 8182 என்ற Bajaj Discover வாகனத்தின் புகைப்படம் |

**எதிரிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :-** இல்லை.

M SANTHI
CHIEF JUDICIAL MAGISTRTE KRISHNAGIRI
Digitally signed by M SANTHI

உதவி அமர்வு நீதிபதி/தலைமை நீதித்துறை நடுவர்,

கிருஷ்ணகிரி.